## கீழக்கரை நகர்மன்ற 30.09.2020—ம் தேதிய கூட்டத்தின் நடவடிக்கைகள்

**பொருள் —1**

கீழக்கரை நகராட்சி பொதுசுகாதார பிரிவில் துப்புரவு பணிகளின்போது பயன்படுத்தப்படும் பேட்டரியில் இயங்கும் வண்டி பழுதடைந்து உள்ளதால் துப்புரவு பணியாளர்கள் துப்புரவு பணிகளை மேற்கொள்ள மிகவும் சிரமமாக உள்ளதால் அவைகளுக்குரிய பேட்டரியில் இயங்கும் வண்டி உதிரிபாகங்கள் வாங்கி பழுதுநீக்கம் செய்து கொடுப்பதற்கு இவ்வலுவலக துப்புரவு ஆய்வாளரால் குறிப்பு வழஙகப்பட்டுள்ளது. மேற்படி பேட்டரியில் இயங்கும் வண்டி உதிரிபாகங்கள் வாங்கி பழுதுநீக்கம் செய்து கொடுப்பதற்கு 8 வாகனங்களுக்கு உத்தேச செலவீனம் ரூ 80,000/— ஆகும் இச்செலவீனத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**ந.க.எண் 1036/2020/எச்1**

**அலுவலக குறிப்பு**

பொதுசுகாதார பணிகளின் அவசர அவசியம் கருதி பேட்டரியில் இயங்கும் வண்டி உதிரிபாகங்கள் வாஙகுவதற்கான உத்தேச செலவீனம் ரூ 80,000/—யை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.775 அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் —2**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பழுதடைந்துள்ள கழிவு நீர் குழாய்கள் மற்றும் மூடிகளை சரி செய்து கொடுப்பதற்கு மதிப்பீடு ரூ.2,90,000/—யை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு இந்நகர் மன்றத்தில் 31.08.2020—ந் தேதி அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் கழிவு நீர் குழாய்கள் மற்றும் மூடிகளை பழுது நீக்கம் செய்யும் பணிக்கு 18.09.2020—ந் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அன்று வரப்பெற்ற கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் பார்வையிட்டு ஒப்புக்கொள்ள வேண்டிய விஷயம்.

| வ. எண் | திட்டம்/ வேலையின் விபரம் | மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| **வருவாய் நிதி 2020–2021** | | | | |
| 1. | கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள கழிவுநீர் குழாய்கள் மற்றும் மூடிகளை பழுது நீக்கம் செய்யும் பணி | 2.90 | திரு.பி. சிவக்குமார் ஒப்பந்ததாரர், 21/52 மெயின் ரோடு, கீழக்கரை. | மதிப்பீட்டு தொகைக்கு 0.32% குறைவு |
| | | | திரு.எஸ். சுரேஷ் 11/36 தங்கப்பா நகர் மஹர் நோன்பு பொட்டல் ரோடு இராமநாதபுரம். | மதிப்பீட்டு தொகைக்கு 1.46% அதிகம் |

**(கோப்பு எண். 410/2020/இ1)**

**அலுவலகக் குறிப்பு:**

மதிப்பீட்டு தொகையை விட 0.32% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.பி. சிவக்குமார் என்பவரின் விலைப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

**தீர்மானம் எண்.776 அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் –3**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பழுதடைந்துள்ள மழைநீர் வடிகால் மற்றும் கழிவு நீர் கால்வாய்கள் மற்றும் மேல் மூடிகளில் ஏற்படும் பழுதுகளை சரி செய்து கொடுப்பதற்கு மதிப்பீடு ரூ.3,20,000/–யை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு இந்நகர் மன்றத்தில் 31.08.2020–ந் தேதி அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மழைநீர் வடிகால் மற்றும் கழிவுநீர் கால்வாய்கள் மேல்மூடிகள் பழுது நீக்கம் செய்யும் பணிக்கு 18.09.2020–ந் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அன்று வரப்பெற்ற கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் பார்வையிட்டு ஒப்புக்கொள்ள வேண்டிய விஷயம்.

| வ. எண் | திட்டம்/ வேலையின் விபரம் | மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| | | | | |
| 1. | கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளில் அமைக்கப் பட்டுள்ள, மழைநீர் வடிகால் மற்றும் கழிவு நீர் கால்வாய்கள் மற்றும் மேல் மூடிகளில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் பழுது நீக்கம் செய்யும் பணி. | 3.20 | திரு.எஸ். சுரேஷ் 11/36 தங்கப்பா நகர் மஹர் நோன்பு பொட்டல் ரோடு இராமநாதபுரம். | மதிப்பீட்டு தொகைக்கு 0.77% குறைவு |
| | | | திரு.பி. சிவக்குமார் ஒப்பந்ததாரர், 21/52 மெயின் ரோடு, கீழக்கரை. | மதிப்பீட்டு தொகைக்கு 2.50% அதிகம் |

**(கோப்பு எண். 409 /2020/ இ1)**

**அலுவலகக் குறிப்பு:**

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகையை விட 0.77% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.எஸ். சுரேஷ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

**தீர்மானம் எண்.777 அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் –4**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட மாலாங்குண்டு நீர் நிலைய கிணறுகள் அமைக்கப்பட்டுள்ள இடத்தில் கிழக்கு, மேற்கு மற்றும் தெற்கு பகுதியில் தடுப்பு வேலி (Chain link fencing) அமைக்கும் பணி செய்வதற்குரிய மதிப்பீடு ரூ.1,50,000/–ஐ இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு இந்நகர் மன்றத்தில் 31.08.2020–ந் தேதி அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மேற்காணும் பணிக்கு 18.09.2020–ந் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அன்று வரப்பெற்ற கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அதன்படி தயார் செய்யப்பட்ட ஒப்பு நோக்குப் பட்டியல் இந்நகராட்சிப் பொறியாளர்களால் பரிந்துரை செய்யப்பட்டது மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | திட்டம்/ வேலையின் விபரம் | மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| **<u>2020–2021ம் ஆண்டு வருவாய் நிதி</u>** | | | | |
| 1. | கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட மாலாங்குண்டு நீர் நிலைய கிணறுகள் அமைக்கப்பட்டுள்ள இடத்தில் கிழக்கு, மேற்கு மற்றும் தெற்கு பகுதியில் தடுப்பு வேலி (Chain link fencing) அமைக்கும் பணி. | 1.50 | திரு.எஸ். சுரேஷ் 11/36 தங்கப்பா நகர் மஹர் நோன்பு பொட்டல் ரோடு இராமநாதபுரம். | ரூ.1,48,623/– மதிப்பீட்டு தொகைக்கு 0.15% குறைவு |
| | | | திரு.பி. சிவக்குமார் ஒப்பந்ததாரர், 21/52 மெயின் ரோடு, கீழக்கரை. | ரூ.1,50,514/– மதிப்பீட்டு தொகைக்கு 1.12% அதிகம் |

**<u>(கோப்பு எண். 408/2020/இ1)</u>**

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

மதிப்பீட்டு தொகையை விட 0.15% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.எஸ்.சுரேஸ், இராமநாதபுரம் என்பவரின் விலைப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

**<u>தீர்மானம் எண்.778 அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் –5</u>**

கீழக்கரை நகராட்சியில் தினமும் சேகாரமாகும் குப்பை கூளங்களை இந்நகராட்சிக்கு சொந்தமான பள்ளமோர்குளம் கிராமத்திற்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள உரக்கிடங்கு வளாகத்தில் கொட்டப்பட்டு, அவற்றை பயோமைனிங் முறையில் பிரித்து உரமாக்கும் பணி நடைபெற்று வருகிறது. இந்நகராட்சி புதிய உரக்கிடங்கில் மூன்றாம் நபர் ஆய்வுக் குழு, ஆய்வு மேற்கொண்டதில், ஏற்கனவே பயோமைனிங் முறையில் பிரித்து உரமாக்கும் பணிக்கு அளவீடு செய்யப்பட்டிருந்த, பழைய குப்பைகளின் அருகில் தற்போது தினசரி சேகரமாகும் புதுக்கழிவுகளை (Fresh waste) புதிய உரக்கிடங்கில் கொட்டப்பட்டு வருகிறது. புதிய குப்பை கழிவுகளை வேறு இடம் தேர்வு செய்து கொட்டுமாறு மதுரை, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் நேரடி ஆய்வில் தெரிவிக்கப்பட்டது. மேற்படி உரக்கிடங்கில் தினசரி சேகரமாகும் புதிய குப்பை கழிவுகளை நகராட்சி உரக்கிடங்கின் கடைசிப் பகுதியில் கொட்டும் வகையில் அந்த இடத்தில் ஏற்கனவே குவிந்துள்ள குப்பை கூளங்களை சமப்படுத்துவதற்கும், எதிர்வரும் மழைக்காலங்களில் பொதுசுகாதார வாகனங்கள் குப்பை கழிவுகளை கொண்டு சென்று கொட்டுவதற்கும் ஏதுவாக JCB இயந்திரம் மூலம் உரிய முறையில் உரக்கிடங்கினை சீரமைத்து தரும்படி 16.09.2020–ந் தேதி இவ்வலுவலக துப்புரவு ஆய்வாளரால் கோரப்பட்டுள்ளது.

மேலும், இந்நகராட்சி உரக்கிடங்கில் பயோமைனிங் முறையில் குப்பை கழிவுகளை பிரித்து உரமாக்கும் பணி செய்யும் பொருட்டு புதுக்கழிவுகளை (Fresh waste) உரக்கிடங்கின் கடைசிப் பகுதியில் கொட்டும் வகையில், அந்த இடத்தினை JCB இயந்திரம் மூலம் சமப்படுத்தும் பணிகள் செய்வதற்கு உத்தேச செலவினம் ரூ.5,00,000/– ஆகும் என்று இவ்வலுவலக துப்புரவு ஆய்வாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்காணும் செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி கோரப்பட்டுள்ளது மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.
(கோப்பு எண்.1036/2020/எச்1)

<u>அலுவலகக் குறிப்பு:</u>

1. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து உத்தேச செலவினம் ரூ.5,00,000/– மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. இந்நகராட்சி உரக்கிடங்கில் பயோமைனிங் முறையில் குப்பை கழிவுகளை பிரித்து உரமாக்கும் பணி செய்யும் பொருட்டு பணியின் அவசியம் கருதி உள்ளூர் விலைப்புள்ளி பெற்று பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.779 அனுமதிக்கப்பட்டது.</u>**

**ஒம்/– ஆ. தனலெட்சுமி,பி.காம்**
**தனி அலுவலர் / ஆணையாளர்(பொ)**
**கீழக்கரை நகராட்சி.**

**/ உண்மை நகல் /**

**ஆணையாளர் (பொ)**
**கீழக்கரை நகராட்சி.**